**ஹொரண நகர சபை 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஹொரண நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள ஹொரண நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.27 முதல் 3.32 வரை குறிப்பிடப்பட்ட பந்திகளுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 2,506,714 ஆன நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது மிகை அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன மானிய கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக நன்கொடைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் வருடாந்த பெறுமானத் தேய்வாக இனங்காண வேண்டிய முறையே ரூபா 9,272 மற்றும் ரூபா | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | அரசாங்கத்தின் மூலதன மானியங்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 304,197 இற்கு சமமான அளவு விரிவான வருமானக் கூற்றில் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்கான அரசாங்கத்தின் மாற்றல்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் வருமான செலவினமாக கணக்கீடு செய்ய வேண்டிய ரூபா 514,305 ஆன பழுதுபார்த்தல் செலவினம் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | பழுதுபார்த்தல் செலவினம் ஆண்டின் வருமானச் செலவினமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 297,659 ஆன நூலக விசாரணைப் பிரிவின் உள்ளக பிரித்தல்கள் நடைமுறை வேலைச் செலவினங்கள் வருமான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | பூர்த்தி செய்யப்படாத செயற்றிட்டங்கள் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொண்டு நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப்பட்ட 17 செயற்றிட்டங்களுக்குரிய ரூபா 732,163 செலுத்த வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | இறுதிக் கொடுப்பனவு மற்றும் நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவித்ததன் பின்னர் கடன் கொடுத்தோர் கணக்கில் அகற்றுதல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170(2)ஆம் பிரிவு | நிலுவை ஆதன வரியை அறவிடும் இறுதி படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்க வில்லை. | ஆதனங்களைத் தடைசெய்தல் தொடர்பான அறிவித்தல் 172 ஆதனங்களுக்கா | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | க விநியோகிக்கப்பட் டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 | கெப் வண்டியின் எஞ்ஜினில் ஏற்பட்ட இழப்பு தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் முறையான விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப டுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 திசம்பர் 31 ஆம் திகதிய நிதியல்லாச் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டி | சபைக்குச் சொந்தமான 08 காணிகள் மற்றும் 06 கட்டிடங்கள் தொழில் தகைமையுள்ள மதிப்பீட்டாளர் ஒருவரை வரவழைத்து மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 25,910,915 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,700,416 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம ான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 22,768,542 | 20,183,756 | 19,505,649 | 9,832,486 | 29,545,100 | 20,920,344 | 18,421,617 | 9,237,657 |
| (ii) | வாடகை | 40,464,200 | 7,615,802 | 14,041,766 | 4,184,462 | 39,564,782 | 8,766,382 | 9,287,995 | 6,621,661 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,290,500 | 481,000 | 2,571,030 | - | 2,790,000 | 462,000 | 2,160,052 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 15,705,750 | 349,966 | 18,678,418 | 119,278 | 30,627,109 | 420,160 | 10,647,390 | 289,277 |
| | மொத்தம் | 82,228,992 | 28,630,524 | 54,796,863 | 14,136,226 | 102,526,991 | 30,568,886 | 40,517,054 | 16,148,595 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனவரி கால பகுப்பாய்வின் பிரகாரம் 01-03 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 4,891,034 ஆகவும், 03-05 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 1,460,648 தொகையும் 05-10 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 1,300,239 ஆகவும் இருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 435,319 ஆகும். | கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக ஆதனங்களை தடைசெய்தல் மேற்கொள்ள முடியாதிருந்த போதும் தற்போது தடைசெய்யும் அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வாடகை நிலுவை ரூபா 6,910,938 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 3,430,595 அதாவது 50 சதவீதம் அறிவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 67,728,825 ஆகும். | 2023.03.31 ஆந் திகதி வரையில் ரூபா 27,893,916 தொகை பெறப்பட்டுள்ளதென அறியத்தருகின்றோம். | நிலுவை முத்திரைக் கட்டணத்தை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் பழைய சந்தைத் தொகுதியில் அமைந்துள்ள 09 புடவைக் கடைகள் மற்றும் பழக் கடைகளில் இருந்து 2021 சனவரி மாதம் முதல் அறவிட வேண்டிய ரூபா 1,608,588 ஆன மின்சாரக் கட்டணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப் பட்டிருக்கவில்லை. | நிலுவை அறிவித்தல் விநியோகிக்கப்பட்ட போதும் அந்தக் கட்டணங்களில் எந்தவொரு தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன் மானிகளை வாசிக்காமையின் அடிப்படையில் உரிய அறவிட வேண்டிய கட்டணத்தை கணிப்பிடுவதற்கு முடியாதிருந்தது. | நிலுவை மின்சார கட்டணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கடைகளைப் பயன்பாட்டிற்கு எடுக்கும் உரித்தை வாடைக்கு வழங்குதல் தொடர்பாக வாடகை உரித்துறுதியில் நிபந்தனை 04 ஆம் பிரிவின் பிரகாரம் 03 மாதங்களை விஞ்சி நிலுவையாகவுள்ள கடைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உடன் படிக்கையின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்ப வாடகைக் காலம் மூன்று வருடங்களை விஞ்சிச் செல்வதற்கு முன் இறுதி வாடகை 03 வருட காலத்தில் வாடகைக் காலம் நீடிக்கப்படாமல் கடைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்த 08 சந்தர்ப்பங்கள் அவதானிக் கப்பட்டன. | நிலுவைக் கட்டணத்தைச் செலுத்தி உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | கடை உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 – 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய வேலைக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,652,542 தொகை மற்றும் 2018-2020 ஆம் ஆண்டுகளுக்குரிய நானாவித கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,348,755 தொகை என்பன 2022 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்துவைக்கப் பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தீயணைக்கும் வண்டி ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு பயனற்றுக் காணப்பட்டது. | தீயணைப்பு வாகனம் பதிவு செய்தல் தொடர்பாக தகவல்கள் காணப்படாமையினால் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | பதிவு செய்தல் தொடர்பான தகவல்களைச் சேகரித்து வண்டியை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட பதிவேடுகளுக்கு கொண்டு வரப்படாத 08 இன்டர்கொம் தொலைபேசிகள் குறைவான பயன்பாட்டுடன் களஞ்சியத்தில் காணப்பட்டது. | 2020.12.31 ஆம் திகதி பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் பிரதான பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | தொலைபேசிகளைப் பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் காணிப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 41 காணிகளின் உரித்தை சபைக்கு கையேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு கையேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சபைக்குச் சொந்தமான காணிகளைக் கையேற்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |